செ.கு. எண்: 201 நாள்: 29-10-2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

அறிக்கை – **29.10.2014**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருப்பாநதி, அடவிநயினார்கோவில், இராமநதி மற்றும் கடனா நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருப்பாநதி, அடவிநயினார்கோவில், இராமநதி மற்றும் கடனா நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு **30.10.2014** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் அம்பாசமுத்திரம் வட்டங்களிலுள்ள **32,024.88** ஏக்கர் நேரடி மற்றும் மறைமுகப் பாசனப் பரப்புகள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.